# சிலப்பதிகாரமும், மண்ணியல் சிறுதேரும் மற்றும் பிற மொழி இலக்கியங்களும் காட்டும் கருத்தியலும் பண்பாட்டுக் கூறுகளும்: ஓர் ஆய்வு

# Thematic and Cultural Identities as revealed in Silappathikaram, Manniyal Siruther and Other Literary Forms of Various Languages: A Study

***முனைவர் எம். சோலையன்***
மூத்த ஆய்வறிஞர்
இந்திய கலாச்சார அமைச்சகம், இந்தியா

**Dr. M. Solayan**
*Senior Fellow, Ministry of Culture*
*Government of India*

**Citation**: Solayan, M. "Thematic and Cultural Identities as revealed in *Silappathikaram*, *Manniyal Siruther* and Other Literary Forms of Various Languages: A Study." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 4, 2025, pp. 5-12.

*ஆய்வுச் சுருக்கம்*

*https://doi.org/10.5281/zenodo.19762186*

*சிலப்பதிகாரம், மண்ணியல் சிறுதேர், தாகூரின் திருப்பிச் செலுத்துதல், புத்த ஜாதகக்கதை ஆகியவற்றில் காணப் பெறும் கருத்தியல் ஒற்றுமையையும், பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்துக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும். ரஷ்யச் சிறுகதையையும், சீன நாடகத்தையும் கருத்தியல் நோக்கில் ஒப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளது. மூலப் படிவ வகை மாதிரி மற்றும் தகர்ப்பமைப்பு வாதம் ஆகிய திறனாய்வு முறைகளிலும் இப்படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.*

***குறிச் சொற்கள்:*** *கருத்தியல் ஆய்வு, பண்பாட்டுக் கூறுகள், பெண்ணியம், மூலப்படிவ வகை, மாதிரி, டெர்ரிடாவின் தகர்ப்பமைப்பு வாதம்*

## Abstract

*This paper attempts to analyze the thematic identity and cultural aspects as found in Silappathikaram, Manniyal Siruther, Tagore's Selected poems and Buddha Jataka story. It also tries to analyze the Russian short story and the chinese play. In all the literary works struggle against injustice remains as the main theme. One could find feministic Perspectives in Indian literary works. The women characters use their intelligence and bravery and strive to seek Justice for the innocent men who are punished by the rulers. These works have also been analyzed based on archetypal and deconstruction theories.*

***Keywords**: Select Literary Works, Thematic Identity, Cultural Aspects, Feministic Perspectives, Archetypal Patterns, Derrida's Deconstruction*

## முன்னுரை

*தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மண்ணியல் சிறுதேர் மற்றும் பிற மொழி இலக்கியங்களான தாகூரின் ஆங்கிலக்கவிதை, டால்ஸ்டாயின் ரஷ்ய சிறுகதை, சீன நாடகம் ஆகியவற்றின் கருத்தியல் ஒருமைப்பாட்டையும், பண்பாட்டுக் கூறுகளையும் இவ்வாய்வுக் கட்டுரை இயம்புவதாக அமைகிறது. மேலைநாட்டுத் திறனாய்வு முறைகளான மூலப்படிவ வகை மாதிரி மற்றும் டெரிடாவின் தகர்ப்பமைப்பு வாதம் வழிநின்று ஆய்வு நிகழ்த்தப்பெற்றுள்ளது.*

**இந்தியமொழி இலக்கியங்களின் கருத்தியல் கோட்பாடு**

*சிறந்த இலக்கியப் படைப்புகளான சிலம்பு, மண்ணியல் சிறுதேர், திருப்பிச் செலுத்துதல் மற்றும் புத்த ஜாதகக் கதை ஆகியவற்றின் கருத்தியல் கோட்பாடாகத் தவறான தீர்ப்பினால் தண்டனை பெற்றுத் துன்பமுறும் குற்றமற்ற வணிகர்கள் படும் பாடு விளங்குகிறது. சிலம்பில், தன்னுடைய கைச்சிலம்பை விற்று வணிகம் செய்ய வந்த கோவலன், பாண்டிய அரசனின் சிலம்பைத் திருடியதாகத் தவறாகத் தீர்ப்பளிக்கப் பெற்றுக் கொல்லப் படுகிறான். மண்ணியல் சிறு தேரில் சாருதத்தன் என்னும் வணிகர் தன் செல்வத்தை எல்லாம் வறியவர்க்கு ஈந்து ஏழை ஆனான். மணமான சாருதத்தன்பால் கணிகை வசந்த சேனை காதல் கொள்கிறாள். சாருதத்தன் மீது கொலைப் பழி சுமத்தப்பட்டு அவனைக் கழுவேற்றும்படி அரசன் கட்டளையிடுகிறான். இறுதியில் உயிருடனிருக்கும் வசந்த சேனையைப் புத்தத் துறவி கொலைக் களத்திற்குக் கொண்டு வந்து அவனை விடுவிக்கிறார். தாகூரின் திருப்பிச் செலுத்துதல் என்னும் கவிதையில் பஜ்ரசேன் என்னும் குதிரை வியாபாரி பனாரஸிற்குத் தன் குதிரைகளை விற்க வருகிறான். மரத்தடியில் குதிரைகளைக் கட்டிவிட்டுத் துயிலும் போது, கொள்ளையர்குதிரைகளை அவிழ்த்துச் சென்று விடுகிறார்கள். அதே நேரத்தில் அரண்மனையில் திருடர்கள் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதால் பஜ்ரசேன் திருடன் எனத் தவறாகக் குற்றம் சாட்டப் பெற்று மரணதண்டனை அளிக்க அரசன் கட்டளையிடுகிறான். ஆனால் கணிகையின் உதவியால் பஜ்ரசேன் உயிர் தப்பி விடுகிறான். சிலப்பதிகாரத்தில் மட்டும் கதைத் தலைவன் மரணதண்டனைக் குள்ளாகிறான். மற்ற இலக்கியப் படைப்புகளில் கதைத் தலைவர்கள் கணிகையரின் உதவியால் தப்பிப் பிழைக்கிறார்கள்.*

**மூலப்படிவ வகை மாதிரியும் ஊழ்வினையும்**

*இக்கருத்தியல் கோட்பாட்டை மூலப்படிவ வகை மாதிரி என்கிற* (Archetypal Criticism) *திறனாய்வு முறையில் ஆய்வு செய்ய முடியும். மனித அனுபவத்தில் திரும்பத் திரும்ப ஏற்படும் உளவியல் மிச்சம்தான் மூலப்படிவ வகை* (Archetype) *எனப்படுவது என்று கார்ல்.சி.ஜங்க் குறிப்பிடுவார். இது மனித உணர்வில் கூட்டாக ஆழ்மனதில் தங்கிப் புராணக் கதையாகவும், கனவாகவும், தனிப்பட்ட கற்பனையாகவும் இலக்கியத்தில் வெளிப்படுகிறது. ஒரு பெரிய கலைப் படைப்பு என்பது கனவினை ஒத்தது என்பார் ஜங்க். எனவே வெவ்வேறு நாடுகளிலும் அல்லது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒரே மாதிரியான கற்பனை ஒரே காலத்திலோ, அல்லது வெவ்வேறு காலங்களிலோ ஏற்படக் கூடும். மூலப்படிவ வகை மாதிரிகள் என்று எடுத்துக் கொண்டால் சிலப்பதிகாரத்தில் சிலம்பு விற்று வணிகத்தைப் பெருக்க வந்த கோவலன் பொற்கொல்லனால் பாண்டிய தேச அரசியின் சிலம்பைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்படுகிறான். இதனால் பாண்டிய மன்னனால் தவறான தீர்ப்பாக மரண தண்டனை கோவலனுக்கு வழங்கப்பட்டது. கோவலனின் மனைவி கண்ணகி தன்னிடமிருந்த சிலம்பைக் கொண்டு அரசனை நேரில் கண்டு சிலம்பை உடைத்துக் கோவலனிடம் இருந்தது மாணிக்கக் கற்களை உடைய சிலம்பென்றும், அரசியின் முத்துப் பரற்கள் உடைய சிலம்பன்று என்றும் மெய்ப்பிக்கிறாள். இதனால் நடுக்குற்ற பாண்டிய மன்னன் மயங்கி விழுந்து சாகிறான். பாண்டிமாதேவியும் அதிர்ச்சியில் உயிரிழக்கிறாள். சினம் மாறாத கண்ணகி மதுரை மாநகரம் தீயால் அழியச் சாபமிடுகிறாள். நகரைவிட்டுத் தெய்வங்கள் எல்லாம் வெளியேறுகின்றன. தலைவிரி கோலமாக நடந்து சென்ற கண்ணகி ஒருகுன்றின் மீது ஏறி நிற்கிறாள். அப்பொழுது வானூர்தியில் தேவ வடிவில் வந்த கோவலன் அவளைத் தன் வானூர்தியில் ஏற்றி விண்ணுலகம் செல்கிறான்.*

*சிலப்பதிகாரத்தில் ஊழ்வினைப்பயன் காரணமாகக் கோவலன் கொலையானான் என்று மதுரை மாதெய்வம் கூறுகிறது. முற்பிறவியில் கபிலபுரத்து வாணிகன் சங்கமன் எனபவன் சிங்கபுரத்திற்கு வந்தான். அப்பொழுது கோவலன் பரதன் என்னும் பெயரில் அரசனுக்கு ஆலோசகனாக இருந்தான். சங்கமனை ஒற்றன் என்று பரதன் அரசனிடம் தெரிவித்து அவனைக் கொன்றனன். இதனால் துடிதுடித்த சங்கமனின் மனைவி நீலி மலையுச்சிக்குச். சென்று தமக்கு இத்தகைய இன்னல்களைத் தந்தவர், இப்பெருந்துயரை அடைய வேண்டுமெனக் கூறிக்கீழே விழுந்து மாண்டாள். அவளுடைய சாபமே கோவலனின் இறப்பிற்குக் காரணம் என்று மதுரை மாதெய்வம் கண்ணகியிடம் கூறியது.*

*எனவே, கோவலனின் தற்போதைய மரணமும், முற்பிறவியில் சங்கமன் மரணமும் மூலப்படிவ வகை மாதிரிகளாக அமைந்துள்ளன. கோவலன் முற்பிறவியில் செய்த வினைப்பயனை அடுத்த பிறவியில் அடைந்தான் என்று ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்னும் கோட்பாட்டின் படியும் பகுத்துப் பார்க்க முடியும்.*

***“காவலன் செங்கோல் வளைஇய, வீழ்ந்தனன்***
***கோவலன் பண்டை ஊழ்வினையின் உருத்து” (16.216-217)***

*என்னும் வரிகளும் ஊழ்வினையின் வலிமையைக் கூறுவனவாகும்.*

***“எம் முறு துயரம் செய்தோர் யாவதும்***
***தம்முறு துயரம் இற்றாகுக, என்றே***
***விழுவோள் இட்ட வழுவில் சாபம்***
***பட்டனிர் ஆதலின், கட்டுரை கேள் நீ.***
***உம்மை வினை வந்து உருத்த காலைச்.***
***செம்மையிலோர்க்குச் செய்தவம் உதவாது” (23.167-172)***

*என்று மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் கூறியது. மலையிலிருந்து விழுமுன் நீலி, தம்மைப் போலத் தமக்குத் துயரம் விளைவித்தவர் கெடுவர் என்று கூறியதால் அம்முன்வினைப் பயன் தற்பொழுது கோவலனுக்கு விளைந்தது என்று மதுராபதித் தெய்வம் கூறியது.*

*மண்ணியல் சிறு தேரிலும் வணிகனான சாருதத்தன் வறியவர்களுக்குத் தன் பொருளைத் தந்து செல்வமிழந்தான். கணிகையான வசந்தசேனை அவன்மேல் காதல் கொண்டாள். சகாரன் என்பான் அரசன் பாலகனின் காதற் கிழத்தியின் உடன் பிறந்தவன். சகாரன் வசந்த சேனையிடம் தன்னை மணக்குமாறு வேண்டுகிறான். வசந்தசேனை மறுக்கவே அவள் கழுத்தை நெரித்துக் கொல்ல முற்படுகிறான். அவள் மயங்கிச் சாயவே, அவள் இறந்தாள் என்று எண்ணி ஓடிவிடுகிறான். அரசனிடம் வசந்த சேனையைச் சாருதத்தன் கொன்றுவிட்டான் என்று கூறுகிறான். எனவே சாருதத்தனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுக் கொலைக்களம் கொண்டு செல்லப் படுகிறான். அப்பொழுது புத்த சமயத் துறவி சம்வாகனன் மயங்கிக் கிடந்த வசந்த சேனையை மீட்டு, அவளைக் கொலைக் களத்திற்குக் கொண்டு வந்து சாருதத்தனைத் தண்டனையினின்று காப்பாற்றுகிறான். இக்கதையிலும் குற்றமற்ற வணிகன் மேல் பொய்க்குற்றம் சாட்டப் பெற்று மரணதண்டனை தரப்படுகிறது. இறுதியில் கதைத் தலைவன் விடுதலை பெறுகிறான். கொலைக்களத்தில் சண்டாளன் ஒருவன் சாருதத்தன் முன்னை யுழ்வினையால் துன்பம் அடைந்தான் என்று கூறுகிறான்:*

***இந் நகர்க்கணி யென இலங்கு வோனிவன்***
***முன்னை யுழ் வலியினால் கொலையின் முற்றினான் (10.320)***

*மற்றொருவன்*

***பல்லவாங் குழுவிற்புக்குத்***
***தாயினைப் பற்றுங் கன்றிற் புல்லு மால் விரைந்து***
***தற்செய் புருடனை நாடி யுழே (10.331)***

*என்று ஊழின் வலிமையைக் கூறுகிறான். ஊழ்வினையையும் தகர்த்துத் தன்னை வசந்த சேனை காப்பாற்றுவாள் எனச் சாருதத்தன் உறுதியாக நம்பினான்.*

*புத்த ஜாதகக் கதையில் வஜ்ரசேனா என்னும் குதிரை வியாபாரி வாரணாசிக்குக் குதிரைகளை விற்க வந்தபோது திருடர்களிடம் குதிரைகளை இழந்து கடுமையாகத் தாக்கப்பட்டுக் கீழே வீழ்ந்து கிடக்கிறான்.அப்போது அங்கு வந்த அரசனின் காவலர்கள் அவனைத் திருடன் என்று தவறாக ஊகித்துக் கொலைக்களத்திற்குச் கொண்டு செல்லுகிறார்கள். ஷியாமா என்னும் கணிகையால் அவன் காப்பாற்றப்படுகிறான். இதே கதையைத் தாகூரும் ''திருப்பிச் செலுத்தல்'' என்னும் தன் கவிதையில் பயன்படுத்தியுள்ளார். புத்த ஜாதகக் கதையில் ஷியாமா கொலை செய்பவர்களுக்குக் கையுட்டு அளித்துத் தான் அனுப்பிய உட்டியா என்னும் இளைஞனைக் கொன்று வஜ்ரசேனாவை விடுவிக்க வழி செய்கிறாள். தாகூரோ, உட்டியா என்னும் இளைஞன் ஷியாமாவின் மேலிருந்த காதலால் தானே திருடன் என்று கூறி உயிர்த்தியாகம் செய்ததாகக் காட்டியுள்ளார்.*

*புத்த ஜாதகக் கதையிலும், தாகூரின் கவிதையிலும் குற்றம்புரியாத வணிகர்கள் வீண் திருட்டுப் பழி சுமத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப்படுகிறார்கள். அக்காலத்தில் அரசர்கள் ஆராயாமல் தவறான தண்டனை வழங்குவதுண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கிய வடிவங்கள் இவை. எனவே மூலப்படிவ இலக்கிய மாதிரி சிலம்பிலும், மண்ணியல் சிறுதேரிலும், புத்த ஜாதகக் கதையிலும், தாகூரின் கவிதையிலும் விளங்குவதை அறிய முடிகிறது.*

**அயல் மொழி இலக்கியங்களில் மூலப்பழவ வகை மாதிரி**

*இம் மூலப் படிவ வகை மாதிரி அயல் மொழி இலக்கியங்களிலும் காணக் கிடைக்கின்றது. லியோ டால்ஸ்டாய் இயற்றிய சிறுகதை ''கடவுள் உண்மையைப் பார்க்கிறார் ஆனால் நியாயத்தைக் காலம் தாழ்த்திச் செய்கிறார்'' மூலப்படிவ வகை மாதிரியில், தவறான தண்டனை பெறும் வணிகன் ஒருவனின் கதையைக் கூறுகிறது. விளாடிமிர் என்னும் ஊரைச் சேர்ந்த வணிகன் அக்ஸினோவ் சந்தையில் பொருள்களை விற்று வரக் கிளம்புகிறான். அவன் மனைவி முதல் நாளிரவு தீய கனவு கண்டதைக் கூறியும் அவன் பயணத்தை நிறுத்தவில்லை. போகும் வழியில் சத்திரம் ஒன்றில் இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு மறுநாள் காலைப் பயணத்தைத் தொடர்கிறான். வழியில் அரசனின் படை வீரர்கள் அவனை மறிந்து உடைமைகளைச் சோதிக்கிறார்கள். அவனுடைய பை யொன்றிலிருந்து இரத்தம் தோய்ந்த கத்தியினை எடுத்து முதல் நாளிரவு சத்திரத்தில் மற்றொரு வணிகனைக் கொன்றதாகக் கைது செய்கிறார்கள்.*

*சிறையில் அடைக்க பெற்ற அக்ஸினோவை அவன் மனைவி வந்து பார்க்கிறாள். சார் மன்னனிடம் தான் குற்றமற்றவன் என்று தெரிவித்து விடுதலை பெற வேண்டுமென்று கூறுகிறான் அக்ஸினோவ. ''ஆனால் அவன்'' மனைவி சார் மன்னன் அவளுடைய வேண்டுதலை நிராகரித்து விட்டதாகக் கூறுகிறாள். பின்னர் அவன் கசையடிகள் கொடுக்கப் பெற்று சைபீரியாவிற்கு அனுப்பப் பெறுகிறான். இருபத்தாறு ஆண்டுகள் சிறையில் கழித்த பிறகு புதிதாக வந்த சிறைக் கைதி அக்ஸினோவிடம் தானே அக்சினோவின் துயர நிலைக்குக் காரணம் என ஒப்புக் கொள்கிறான். அக்ஸினோவின் விடுதலைக்கு உதவுவதாகவும் கூறுகிறான். ஆனால் அக்ஸினோவ் அவனை மன்னித்து விடுகிறான். விடுதலையை அவன் விரும்ப வில்லை. அன்றிரவே அக்ஸினோவ் சிறையில் இறந்து போகிறான். இக்கதையிலும் குற்றமற்ற*

*வணிகனுக்குக் கொடிய சிறைத்தண்டனை தவறாகத் தரப்படுவதால், இது மூலப் படிவ மாதிரி வகையில் அமைந்துள்ளது.*

*குவான் ஹான்சிங்கின், சீன நாடகம் "கோடை காலத்துப்பனி"யும் மூலப்படிவ மாதிரியில், குற்றமற்றவர் மரண தண்டனையைத் தவறாகப் பெறும் விதத்தை விவரிக்கிறது.*

*டௌ-என்-கோ என்னும் இளம் விதவை சாங்க் என்னும் கிழவனைக் நஞ்சுட்டிக் கொன்றதாக மரண தண்டனை விதிக்கப் பெறுகிறாள். உண்மையில் டௌ-என்-கோ தயாரித்த சுப்பில் நஞ்சைக் கலந்தது சாங்கின் மகன் டாங்கிதான். இதனால் இளம் விதவையின் தாயைக் கொன்று அவளை மணக்கத் திட்டமிட்டிருத்தார் டாங்கி. ஆனால், டௌ-என்-கோவின் தாய் சுப்பைத் தான் பருகாமல் சாங்கிடம் தந்து விடுகிறாள். எனவே சாங்க் இறக்கிறான். தன் தந்தையின் சாவிற்குத் தானே காரணமாக இருந்த போதும் அதனை மறைத்துப் பழியை டௌ-என்-கோவின் மீது சுமத்துகிறான் டாங்கி.இதனால் டௌ - என் -கோ கொல்லப்படுகிறாள். ஆவியான டௌ- என் -கோ. நீதிபதியாக இருக்கும் தந்தையிடம் உண்மையைக் கூறி டாங்கிக்கும், நஞ்சைத் தந்த மருத்துவருக்கும் தண்டனை வாங்கித் தருகிறாள். இந்த நாடகத்திலும் கதைத்தலைவி குற்றம் சாட்டப் பெற்றுத் தவறான தீர்ப்பால் உயிரிழக்கிறாள்.*

*சிலப்பதிகாரம், மண்ணியல் சிறுதேர், புத்த ஜாதகக்கதை, தாகூரின் கவிதை ஆகியவை போல அயல் நாட்டு இலக்கியங்களான ரஷ்யச்சிறுகதை மற்றும் சீன நாடகத்திலும் குற்றம் புரியாதவா்கள் ஆராயமல் தரப்பட்ட தீரப்பின் காரணமாகத் தண்டிக்கப்படும் மூலப் படிவ வகை* (Archetype) *காணப்படுகிறது.*

**பெண்ணியம்**

*ஜான் ரஸ்கின் என்னும் அறிஞர் ஷேக்ஸ்பியரின் படைப்புகளில் வீரர்கள் இல்லை வீராங்கனைகளே உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஆண் கதாபாத்திரங்கள் வீரத்தன்மை குறைந்தவர்களாகவும், பெண் கதாபாத்திரங்கள் வீராங்கனைகளாகவும் விளங்கினர். ரஸ்கின் ஷேக்ஸ்பியரின் பெண் தலைமைக் கதாபாத்திரங்கள் அறிவு மிகுந்தவராகவும், கதைப்போக்கை மாற்றி யமைப்பவராகவும் விளங்கினர் என்று கருதினார். பெண் கதாபாத்திரங்கள் இலட்சியக் கதாபாத்திரங்களாக விளங்கினர். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பவர்களாகவும் விளங்கினர்.*

*சிலம்பதிகாரத்தில் சிலம்பை விற்கச் சென்ற கோவலன் பொற்கொல்லனின் சுதினை அறியாமற் சென்று கொலை செய்யப்படுகிறான். முன்னதாக மாதவி என்னும் கணிகையின் அழகால் ஈர்க்கப் பெற்றுத் திண்ணிய உள்ளம் பெறாமையால், அவளுடன் வாழ்ந்து பிறகு மனம் திருந்தி வந்தான். கண்ணகியோ செல்வ முற்றும் அவன் இழந்த போதும், "சிலம்புள, கொள்கசுசு என்று கூறிச் சிலம்பைக் கொண்டு சென்று விற்று வாழ்க்கை நடத்த வழிகாட்டுகிறாள். அவன் இறந்து பட்டதும் வெகுண்டெழுந்து பாண்டிய மன்னனை நேரே கண்டு "தேரா மன்னா!" என்று விளித்துத் தன் சிலம்பிற்கும், பாண்டிய அரசியின் சிலம்பிற்கும் உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்திக் கோவலன் கள்வன் அல்லன் என்று உறுதி செய்கிறாள். மதுரையைத் தீயால் எரியச் சாபம் விடுகிறாள். சிலப்பதிகாரத்திலும் கதைத் தலைவனாக ஆண் பாத்திரம் இல்லை பெண்ணே கதைத் தலைவியாக விளங்குகிறாள். பெண்ணியத்தை மிகச்சிறப்பாக விளக்குவதற்கு இளங்கோவின் காப்பியம் உதவி செய்கிறது.*

*மண்ணியல் சிறுதேரிலும் சாருதத்தன் என்ற ஆண் கதாபாத்திரம் தலைமைப் பண்பினைப் பெறவில்லை. அவனை விரும்பிய கணிகையான வசந்தசேனை தன் நற்பண்புகளால்*

*ஒளிர்விட்டுத் தலைமைப் பாத்திரமாகும் நிலையை அடைகிறாள். சாருதந்தனின் மைந்தனுக்குப் பொன்னாலான சிறு தேர் செய்ய அணிகலன்களைத் தருகிறாள். சாருதத்தனின் மனைவி தந்த நகையினையும் திருப்பித் தந்துவிடுகிறாள். சம்வாககனின் கடனைத் தீர்த்து உதவுகிறாள். சகாரனின் ஆசைக்கு உட்பட மறுக்கிறாள். அவன் அவள் கருத்தை நெரித்துக் கீழே தள்ளியதோடல்லாமல் சாருதத்தன் மேல் கொலைப் பழியைச் சுமத்துகிறான். சம்வாககனுக்கு வசந்தசேனை முன்பு உதவியதால், அப்புத்தத் துறவி வசந்தசேனையை மீட்டுச் சாருதத்தனையும் கொலைப் பழியினின்று காப்பாற்றுகிறார். வசந்தசேனை நற்பண்புகள் நிரம்பியிருந்ததால் ‘‘வது’’ என்னும் குலமகளாகிறாள்.*

*புத்த ஜாதகக் கதையிலும், தாகூரின் தழுவல் கவிதையிலும் கணிகையாக வருபவளே பஜ்ரசேன் என்கிற குதிரை வியாபாரியின் உயிரைக் காப்பாற்றி உதவுகிறாள்.*

*டால்ஸ்டாயின் கதையில் அக்ஸினோவ் கொலைகாரன் என்னும் பழியைப் பெற்று சைபீரியச் சிறையில் அடைக்கப்படுகிறான். அவன் மனைவியும் அவனுக்காக சார் மன்னருக்கு வேண்டுகோளை விடுத்துச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுகிறாள். மன்னர் மறுத்து விடவே அவளும் தன்னுடைய வீட்டிற்குச் சென்று விடுகிறாள். எனவே, இக்கதையில் ஆண் கதாபாத்திரமும், பெண் கதாபாத்திரமும் எழுச்சியுடன் போரிட்டு விடுதலை பெற முடியவில்லை.*

*சீன நாடகத்தில் கதைத் தலைவியாக வரும் டௌ-என்-கோ கொலைக்குற்றத்திற்கு ஆளாகிக் கொல்லப்படுகிறாள். ஆனாலும் சாவதற்கு முன்னமாக மூன்று செய்திகளைக் கூறுகிறாள். அவளுடைய இரத்தம் தரைமீது படக்கூடாது. மூன்று அடி அளவுக்குப் பனி அவள் உடலை மூடியிருக்க வேண்டும். தொடா்ந்து மூன்று ஆண்டுகள் அந்த மாவட்டம் வறட்சியால் வாட வேண்டும். இப்படிச் சாபமிட்டவாறு சாவை எதிரகொண்டாள் அவள். இறந்த பிறகு ஆவியாக வந்து, நீதிபதியாக இருந்த தன் தந்தையிடம் உண்மையைக் கூறிக் குற்றவாளிகளுக்கும் தண்டனை பெற்றுத்தருகிறாள். இந்நாடகத்தின் தலைமைக் கதாபாத்திரமாகவும், வீராங்கனையாவும் டௌ- என் -கோ விளங்குகிறாள்.*

**தகர்ப்பமைப்பு வாதம்**

*இலக்கியத்தின் கருத்தியலை டெரிடாவின் தகர்ப்பு அமைப்பு வாதக் கொள்கை மூலம் விளக்க முடியும். சிலப்பதிகாரத்தினைப் பொருள் உணர்ந்து கொள்ள இரு எதிர்முனைகளைக் கொண்டு விளக்கமுடியும். கோவலன் மற்றும் கண்ணகியை நேர்மையின் வடிவாகவும், பாண்டிய மன்னனை நேர்மையின்மையின் வடிவாகவும் நாம் குறிக்க முடியும். நேர்மையின் வடிவாக அமைந்த கண்ணகி மதுரை நகரை எரித்தமை பழிவாங்கும் நிலையின் உச்சத்தைக் காட்டுகிறது. நேர்மையின்மையின் வடிவாக விளங்கிய பாண்டிய மன்னன் தன்னுடைய தவறான தீர்ப்புக்காக மனம் வருத்தி உயிர் விட்டமை அவனுடைய இயல்புக்கு மாறாக அமைந்திருக்கிறது. நேர்மை என்பது நிலையான தத்துவம் என்பதை இது மறுக்கிறது. நெருப்பு என்பது தூய்மையைக் குறிக்கும் பொருளாக இருப்பினும் கண்ணகி மதுரையை எரித்த பொழுது அது அழிவு சக்தியாக மாறுகிறது. கண்ணகியின் காற்சிலம்பை கோவலன் விற்றுப் பொருளீட்ட முயலும்போது செல்வமாகவும், கண்ணகி காலில் அணிந்த போது அழகாகவும், பொற்கொல்லன் கைக்குச் சென்ற போது துரோகமாகவும், பாண்டிய மன்னனின் அவையிலே உடைந்துபோன போது சாட்சியப் பொருளாகவும் மாறிவிடுகிறது அர்த்தம் நிலைத்த ஒன்றல்ல் மாறக்கூடியது என்பது இதனால் தெரிய வருகிறது.*

*மண்ணியல் சிறுதேரிலும் இரு எதிர்முனைகளாக செல்வம்/வறுமை, தீது/நன்று, நற்பண்பு/ஒழுக்கக்கேடு என்பன போன்ற பண்புகள் இலக்கிய மையக் கருத்துகளாக*

*விளங்குவதைக் காண முடிகிறது. சாருதத்தன் செல்வந்தனாக விளங்கி வறியவர்க்கு உதவி புரிந்ததால் வறியவனாகிறான். விலைமகளாக இருந்த வசந்தசேனை நற்பண்பு காரணமாகக் குலமகளாகப் போற்றப்படுகிறாள். திருட்டு என்கிற தீய செயலில் ஈடுபட்டுப் பெற்ற செல்வத்தைக் கொண்டு ஓர் அடிமைப்பெண்ணிற்கு விடுதலை என்கிற நன்மை கிடைக்க வழிசெய்கிறான் சருவிலகன் என்பவன். இங்கே தீமை நன்மையாகிறது. சம்வாககன் என்பவன் கடன் தந்தவர்கள் துரத்திவர வசந்த சேனையிடம் அடைக்கலம் புகுந்து பொருட்கொடை பெற்றுக் கடன் அடைக்கிறான். இப்பொருட்கொடையே பிற்காலத்தில் வசந்தசேனை மயக்கமடைந்து கிடக்கிறபோது சம்வாககனால் நீர்தெளித்துக் காப்பாற்றப்பெற்று உயிர்க்கொடையாக மாறுகிறது. அரசனின் உறவினன் ஆகிய சகாரன் அரச நீதியைக் கைக்கொண்டு மக்களைக் காக்கவேண்டிய நிலையினின்று தவறி வசந்த சேனையை வன்புணர்ச்சி செய்ய விழைகிறான். இவ்வாறு மண்ணியல் சிறுதேர் என்னும் படைப்பில் அர்த்தம் நிரந்தரமாக இல்லாது மாறுபட்ட நிலையில் விளங்குவதை அறிய முடிகிறது.*

*தாகூரின் திரும்ப செலுத்துதல் என்னும் கவிதையில், பஜ்ரசேன் என்னும் குதிரை வியாபாரி பனாரஸிற்குக் குதிரைகளை விற்க வருகிறான். மரத்தடியில் குதிரைகளைக் கட்டிவிட்டுத் துயிலும் போது அவனைத் தாக்கிக் குதிரைகளைக் கவர்ந்து செல்கிறார்கள் கள்வர்கள். ஆனால் அங்கு வந்த அரசனின் படைத்தலைவன் ஊருக்கு புதியவனான பஜ்ரசேனைக் கள்வன் என்று கட்டியிழுத்துச் செல்கிறான். இங்கே தன் குதிரைகளைப் பறிகொடுத்தவன் கள்வன் என்று கைது செயயப்படுகிறான். கணிகையொருத்தி அவன்பால் காதல்வயப்பட்டு அவனுடைய விடுதலைக்கு உதவுகிறாள். ஊட்டியா என்னும் இளைஞன் அவள்மேல் தீராக்காதல் கொண்டிருந்தான். திருட்டுப்பழியை அவனை ஏற்கவைத்து பஜ்ரசேனை விடுவிக்கிறாள் அக்கணிகை. கணிகையின் காதல் குற்றமற்ற ஒருவனின் உயிர்த்தியாகத்தில் முடிகிறது. இவ்வாறு முரண்பாடான செய்திகள் மண்ணியல் சிறுதேரில் காணப்படுகின்றன.*

**சமுதாயம் மற்றும் பண்பாடு**

*சிலப்பதிகார காலத்திலும், மண்ணியல் சிறுதேர் வடமொழியில் எழுதப் பெற்ற காலத்திலும் ஓர் ஆண்மகன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணக்கும் நிலை இருப்பது தெரியவருகிறது. கணிகையர் அக்காலத்தில் எவ்வித எதிர்ப்பும் இன்றி வாழ்ந்தது தெரிய வருகிறது. கணிகையரில் சிலர் கற்புடைய மங்கையராக (வசந்தசேனை, மாதவி போல) வாழ விரும்பியதும் தெரிய வருகிறது. அரசர்கள் ஆராயாமல் தவறான தண்டனைகளை வழங்கியமையும் நடை பெற்றிருக்கிறது. மக்கள் இயற்கையழகைப் போற்றியமை நன்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் மட்டும் இயற்கையிறந்த நிகழ்வுகள் நிறையக் காட்டப்பட்டுள்ளன. ''மண்ணியல் சிறுதேரிலும்,'' தாகூரின் ''திருப்பிச் செலுத்துதல்'' என்னும் கவிதையிலும் இயற்கையிறந்த நிகழ்வுகள் எவையும் கூறப்பட வில்லை. ரஷ்யச் சிறுகதையிலும் ''இயற்கையிறந்த நிகழ்வு ஏதுமில்லை. ஆனால் ''கோடைகாலத்தில் பனி'' என்னும் சீன நாடகத்தில் இயற்கையிறந்த நிகழ்வு காட்டப்பட்டுள்ளது. இறந்துபோன இளம் விதவையின் ஆவி, தன் தந்தையின் உதவியுடன் தனக்குக் கெடுதல் செய்தவரைத் தண்டிப்பதாகக் கூறப்படுவது இயற்கையிறந்த நிகழ்வாகும். தன்னுடைய உடலின் மீது பனி போர்த்தப்படவேண்டும் என்றும், தன்னைக் கொல்லும் போது இரத்தம் தரையில் படக் கூடாது என்றும் மூன்று ஆண்டுகள் மாவட்டம் முழுவதும் வறட்சி நிலவ வேண்டும் என்றும் அவள் சாபமிடுவது இயற்கையிறந்த நிகழ்வாகும்*

*கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கும் போது அறவோர், அந்தணர், மகளிர், குழந்தைகள், பசுக்கள் ஆகியோரை அத்தீ. சுழக்கூடாதெனப் பெருந்தன்மையுடன் கூறுகிறாள். இறுதியில், அரசனை மன்னித்து, தென்னவன் தீதிலன் என்றும் கூறுகிறாள். அரசனை எதிர்த்துப் போராடும் அளவுக்கு ஒரு பெண்ணிற்குத் துணிவு இருந்தது என்பதும் தெரிய வருகிறது. ரஷ்யக்கதையில் அக்ஸினோவ் இறுதியில் செமியோனிச்சைப் பார்த்துக் கடவுள் உன்னை மன்னிப்பார் என்று கூறுகிறான். சாரு தத்தன் வறியவர்களுக்குப் பொருளைத் தந்து வறுமை நிலை யடைகிறான். கணிகையான வசந்த சேனை சாருதத்தனின் புதல்வனுக்குப் பொன்னாலான தேர் செய்ய நகைகளைத் தருகிறாள். சம்வாகனின் கடனைத் தீர்க்கிறாள். அக்கால மக்கள் இரக்க குணம் நிறைந்தவராக இருந்தமை தெரிய வருகிறது. அக்காலத்திலும் கள்வர்கள் எங்கும் திருடுவதைத் தொழிலாகக் கொண்டிருந்ததும் தெரிய வருகிறது. மண்ணியல் சிறுதேர் மூலமாகக் கணிகையரும் அடிமைகளாகச் சில பெண்களை வைத்திருந்ததும், குறிப்பிட்ட பணத்தைக்கொடுத்து அவர்களை மீட்டுச் செல்வதும் நடந்திருக்கிறது. என்பதும் தெரிய வருகிறது. மாதவியின் மாலைக்கு ஆயிரத்து எட்டு கழஞ்சு பொன் கொடுப்பவருக்கு அவள் உரிமையாவாள் என்று அறிவிக்கப்பட்டது. கோவலன் அப்பொன்னைக் கொடுத்து அம்மாலையை வாங்கினான். மாதவி அவன் துணையானாள். இவ்வாறு பொன்கொடுத்து ஆடவர் பெண் பெறும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. அந்தணர் மேல் கொலைப்பழி விழுந்தால் அவரைத் தண்டிக்காமல் நாடு கடத்த வேண்டும் என்னும் மனுநீதி மண்ணியல் சிறுதேரில் கூறப்படுகிறது.*

**முடிவுரை**

*இதுகாறும் கூறியவற்றால், தேர்ந்தெடுக்கப் பெற்ற தமிழ் இலக்கியங்களிலும், ஆங்கில, சீன, ரஷ்யப் படைப்புகளிலும் அநீதிக்கு எதிரான போராட்டம் என்பது மையக் கருத்தாக அமைந்திருப்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. பெண்ணியத்தின் பெருமையை இப்படைப்புகள் பாராட்டுவதும் கவனிக்கத்தக்கதாகும்.*

**துணை நின்ற நூல்கள்**

1. *இளங்கோவடிகள். சிலப்பதிகாரம். பாரதி பதிப்பகம், 2019.*
2. *கதிரேசன் செட்டியார், மு. மண்ணியல் சிறுதேர். ஆனந்த நிலையம், 2000.*
3. *தாகூர், ர. தெரிந்தெடுக்கப் பெற்ற கவிதைகள். உ.பி.எஸ். புதிப்பகம்,1995.*
4. *லாட்ஜ், டே. தற்காலத் திறனாய்வுக் கொள்கைகள். பியர்ஸன், 1988.*

## References

1. Elango. *Silapathikaram*. Bharathi Publications, 2019.
2. Kathiresa Chettiar, M. *Manniyal Siruther*. Anandha Publishers, 2000.
3. Tagore, R. *Selected Poems*. U. P. S. Publication, 1995.
4. Lodge, D. *Modern Criticisim and Theory*. Pearson, 1988.